www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS Crl. Misc.39
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
ADDITIONAL MAHILA COURT, MADURAI

| | | |
|---|---|---|
| Calendar | : | C.C.No.63/14 |
| Deposition of Witness for | : | PW.1 |
| Name | : | Manickavalli |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of December 2020.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் உள்ள டி.நகரில் பாலாஜி ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறேன். 1ம் எதிரி சுஜய் கார்த்திளனத கணவர். 2ம் எதிரி எனது மாமியார். 3ம் எதிரி 1ம் எதிரியின் அண்ணன். 4ம் எதிரி 3ம் எதிரியின் மனைவி. எனக்கு ஏற்கனவே திருமணம் நடந்து அந்த கணவர் ஊசி மூலமாக போதை ஏற்றும் பழக்கத்திற்கு அடிமையாக இருந்ததால், குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமுடியவில்லை. அதனால், சரிவராது என்று நான் என் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். ஸ்டுடண்ட் விசாவில் லண்டன் போய் பட்ட மேற்படிப்பு படித்தேன். 3,4 வருடங்களாக மார்க்கெட் ரிசர்ச்சராக வேலை பார்த்தேன். பிறகு 3,4 வருடங்கள் கழித்து சுஜய் கார்த்திக் எனது முதல் திருமணம் பற்றி தெரிந்தே என்னை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு முன்பாக 3ம் நபரை வைத்து ரூ. 9 லட்சம் வாங்கிக்கொண்டார். திருமணத்திற்கு பிறக வீடு பார்க்கவேண்டும் என்று வீட்டு செலவு என்று ஒன்றரை லட்சம் வாங்கிக்கொண்டார். என் அப்பா தான் வீட்டு செலவு செய்தார். கார் வாங்கிக்கொடுத்தார் சுஜய் கார்த்திக் எதுவும் சுயமாக செய்யவில்லை. கொஞ்சநாளில் சண்டைபோட ஆரம்பித்துவிட்டார். நான் எவ்வளவோ பொறுத்துப்போயும் அவர் சண்டை போட்டார். பொள்ளாச்சிக்கு ஒரு நிச்சயதார்த்திற்கு வந்தபோது அவர் என்னை அங்கேயே என் அப்பா அம்மாவுடன் விட்டுவிட்டு போய்விட்டார். சுஜய்கார்த்திக் பெங்களூரில் தான் வேலை பார்த்தார். நகை ஒரு 150 பவுன் நகை வைத்துள்ளேன். அதையும்அவரே எடுத்துக்கொண்டார். வீட்டு பொருட்களையும் அவரே எடுத்துகொண்டு எங்களிடம் சொல்லாமலேயே வீட்டை காலி செய்துவிட்டார். எவ்வளவோ பேசிப்பார்த்தும் அவர் சரிவரவில்லை. நோட்டீஸ் அனுப்பியுள்ளார். எனது முதல் திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது. 2 திருமணங்கள் பொறுத்தும்என் மீது எந்த தவறும் இல்லை. எனது பணத்தை பிடுங்கிக்கொண்டு எனது மனநிலை சரியில்லை, உடல்நிலை சரியில்லை என்று பழி போட்டு

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-1.pdf

சுஜய் கார்த்திக் வாழ மறுத்துவிட்டார். 3 மாதம் நன்றாக தான் இருந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும புகார் மனு நான் காவல் நிலையத்தில் அளித்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ1** ஆகும். நான் என் அம்மா வீட்டில் இருந்தபோது எனக்கு மனநிலை சரியில்லை என்று கலாட்டா செய்தார்கள். வெளியில் இருந்து அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் இருக்கும் கத்திவிட்டு சென்றுவிட்டார்கள். எனது தகப்பனார் பண பரிவர்த்தனை செய்ததற்கான ஆவணங்கள் உள்ளது. அதனை கொண்டுவருகிறேன்.

**(அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-1.pdf

www.ecourtsindia.com